செ.வெ.எண் 45 நாள். 18.04.2017

# பத்திரிக்கை செய்தி

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏப்ரல் 2017 மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் **21.04.2017** (மூன்றாவது வெள்ளிக்கிழமை) அன்று காலை 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். மு.கருணாகரன், இ.ஆ.ப அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க உள்ளார்கள். எனவே விவசாயிகள் குறை தீர்ப்பதற்காக நடைபெறும் இக்கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்து நிவாரணம் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்கள் முனைவர்.மு.கருணாகரன், இ.ஆ.ப அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

18/4/17

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
நேர்முக உதவியாளர் (வேளாண்மை)
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி